தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,விருதுநகர் மாவட்டம்

PRESENT: Thiru.M.Veeranan, M.A., L.L.M.,
Chief Judicial Magistrate, Srivilliputtur.

2025 ம் வருடம் செப்டம்பர் மாதம் 23 ம் தேதி செவ்வாய்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 312/2025

*******

தமிழ்நாடு அரசின் பிரதிநிதி,
உதவி இயக்குநர்–I,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்–II
சிவகாசி ... குற்றமுறையிடுபவர்

–––எதிர்–––

G.சங்கர் ... எதிரி

குற்றச்சாட்டு : (1) தொ.ச. பிரிவு 41 விதி 61 F
(2) தொ.ச. பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(o) மற்றும் உடன்பிரிவு 92 ன் படி

******

இவ்வழக்கு 17.03.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் துணை இயக்குநர்–I, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்–II, அலுவலகம்,விருதுநகர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.Jeyaram, M.A.B.L., அவர்கள் ஆஜராகியும் இது நாள்வரை இந்நீதிமன்ற பரீசிலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

தீர்ப்புரை

09.10.2024 அன்று பிற்பகல் 01.40 மணியளவில் வாதி விருதுநகர் மாவட்டம்,சிவகாசி வட்டம், விஸ்வநத்தம் கிராமத்தில் உமக்குச் சொந்தமான **நடேஷ் பயர் ஒர்க்ஸ்** ஆய்வுசெய்த போது தொழிற்சாலையில் எந்தவொரு தொழிலோ அல்லது பணியின் செயல்முறையோ தொழிலாளர்களின் உடலுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இருத்தல் கூடாது. ஆனால் அறை எண் 19, 42A, மற்றும் 26,38,34 ஆகியவற்றில் தொழிலாளர்களின் உடலுக்கு ஊறுவிளைவிக்கும் வகையில் இருந்தது ஆய்வின்போது கண்டறியப்பட்டது. தொழிற்சாலையில் 50 வயது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு கண் பரிசோதனை வண்ணம் சோதனை உட்பட காதொலி சோதனை செய்யப்பட்டு தகுந்த கண் மருத்துவர் மற்றும் காது, மூக்கு தொண்டை நிபுணரிடமிருந்து சான்றிதழ் பெறப்பட வேண்டும். ஆனால் தொழிற்சாலையின் ஆய்வின் போது சோதனை சான்றுகள் ஆய்வின்போது ஆய்வாளர் கேட்கும் போது காண்பிக்கப்படவில்லை. உமது செயல் தொழிற்சாலை சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950 ன் படி

முரணானது என்று உம்மீது வாதி தொழிற்சாலைகள் சட்டப்பிரிவுகள் (1) பிரிவு 41 விதி 61 F, (2) பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(o) மற்றும் உடன்பிரிவு 92ன் படி குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளார்.

**புகார்தாரர் ஆஜர். எதிரியின் வழக்குரைஞர் ஆஜரானார்.**

2. எதிரிக்காக அவரது வழக்கறிஞர் ஆஜராக அனுமதி கோரி குவிமுச 205வது பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் குற்ற ஒப்புதல் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. குற்றமுறையிடுபவர் தரப்பில் தாக்கல் செய்த ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு முறையாக வழங்கி குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரியின் வழக்கறிஞர் எதிரியின் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டு குற்றவாளிதான் என்று கூறினார்.

3. எதிரியின் தம்மிச்சையான குற்ற ஒப்புதலை கருத்தில் கொண்டு எதிரி தொழிற்சாலைகள் சட்டம் 1948 (உடன் திருத்தப்பட்ட சட்டம் 1987) மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள் 1950ன் படி பிரிவு 41 விதி 61 F மற்றும் உடன்பிரிவு 92ன் படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.10,000/– விதித்தும் கட்டத் தவறினால் 1 மாதம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 87 விதி 95 அட்டவணை XXIV இனம் 10(o) மற்றும் உடன்பிரிவு 92ன் படி குற்றவாளி என்று தீர்மானித்து ஷை குற்றத்திற்கு எதிரிக்கு அபராதம் ரூ.10,000/– விதித்தும் கட்டத் தவறினால் 1 மாதம் மெய்காவல் சிறைத்தண்டனை விதித்தும், உத்தரவிடப்படுகிறது.

மொத்த அபராதம் தொகை ரூ.20,000/–

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் செவ்வாய்கிழமை 23ம் நாளாகிய இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

இணைப்பு – இல்லை

ஒப்பம்/–மு. வீரணன்
தலைமை நீதித்துறை நடுவர்,
திருவில்லிபுத்தூர்.